**நவம்பர் – 30**

# TNPSC துளிகள்

- தமிழ்நாடு மாநில அரசானது பிரதம மந்திரி விஸ்வகர்மா திட்டம் ஆனது, தற்போதுள்ள வடிவில் மாநிலத்தில் செயல்படுத்தப்பட மாட்டாது என்றும், அதை மாற்றியமைக்க வலியுறுத்தியும் மத்திய அரசிடம் கருத்து தெரிவித்துள்ளது.
- ஜம்மு மற்றும் காஷ்மீரில் 1950 ஆம் ஆண்டிற்குப் பிறகு முதல் முறையாக நவம்பர் 26 ஆம் தேதியன்று 'சம்விதான் திவாஸ்' கொண்டாடப்பட்டது.
- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள் இந்திய அரசியலமைப்பின் 75வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் பாராளுமன்றத்தின் இரு அவைகளின் ஒரு கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றினார்.
  - இந்த நிகழ்வின் போது, சமஸ்கிருதம் மற்றும் மைதிலி ஆகிய மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்ட அரசியலமைப்பு சட்டத்தின் மொழிபெயர்ப்புப் பதிப்புகளையும் அவர் வெளியிட்டார்.
- இந்தியாவில் நாளமில்லா சுரப்பி மண்டல அறுவைச் சிகிச்சையின் தந்தை என்று கருதப் படும் சிவபாதம் விட்டல் சமீபத்தில் காலமானார்.
  - இவர் தமிழ்நாடு அறிவியலாளர் விருது மற்றும் டாக்டர் B.M. சுந்தரவதனம் சிறந்த ஆசிரியர் உள்ளிட்ட விருதுகளைப் பெற்றுள்ளார்.
- IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில், கருவயிற்று மண்கொத்தி என அழைக்கப் படும் டன்லின் (கேரளாவில் காணப் படும்) என்ற ஒரு சிறிய கடற்கரைப் பறவையின் பாதுகாப்பு நிலையானது, 2023 ஆம் ஆண்டில் இருந்த தீவாய்ப்புக் கவலை குறைந்த இனம் என்ற நிலையிலிருந்து 2024 ஆம் ஆண்டில் அச்சுறுத்தல் நிலையினை அண்மித்த இனம் என்ற நிலைக்கு மாற்றப்பட்டுள்ளது.
- பாலஸ்தீன மக்களுடனான சர்வதேச ஒற்றுமை தினம் ஆனது ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 29 ஆம் தேதியன்று, பிரிவினைத் திட்டத்தின் ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் அல்லது ஓர் அரபு நாடு மற்றும் ஒரு யூத அரசை நிறுவுவதற்கான 181 (II) தீர்மானத்தினை நினைவு கூரும் வகையில் அனுசரிக்கப் படுகிறது.

# தமிழ்நாடு செய்திகள்

## HRCE சட்டம் தொடர்பான சென்னை உயர்நீதிமன்றம்

- சென்னை உயர்நீதிமன்றம் ஆனது, கோயில் வருமானம் மூலம் இந்து சமய அற நிலையத் துறையினால் (HR&CE) நிறுவப்பட்ட சுயநிதி கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத காலிப் பணியிடங்களுக்கு இந்துக்களை மட்டுமே நியமிக்க முடியும் என்று கூறியுள்ளது.
- அத்தகைய பணி நியமனம் பெற்றவர்கள், அவர்கள் இந்து மதத்தைக் கடைபிடிப்பதை நிறுத்திய தருணத்தில் இருந்து அந்தப் பதவியைத் துறந்ததாகக் கருதப்படுவர்.
- எந்தவொரு அரசாங்க உதவியையும் பெறாத சுயநிதி நிறுவனம் ஆனது, பொது வேலை வாய்ப்பில் சமத்துவத்தை வழங்குவதற்காக, 'அரசு' என்ற சொல்லின் வரையறையின் கீழ் வராது.
- மேலும், கோயில் நிதியில் நிறுவப்பட்ட சுயநிதிக் கல்லூரி மற்றும் அதன் மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் கட்டணத்தின் மூலம் தனது தொடர்ச்சியான செலவுகளை ஈடுகட்டுவது அரசியலமைப்பின் 16(1) மற்றும் (2) சரத்துகளின் கீழ் வராது.

- அதற்குப் பதிலாக அது குறிப்பிட்ட சில மத நிறுவனங்களில் மதத்தின் அடிப்படையில் நியமனம் செய்ய அனுமதிக்கும் 16(5) சரத்தின் கீழ் வரும்.




## கூட்டுறவுத் துறை உறுப்பினர்களின் சமூகப் பாதுகாப்பு



e

- தமிழ்நாடு மாநில அரசானது, கூட்டுறவுத் துறையின் கீழ் ‘வேர்கள்’, ‘விழுதுகள்’ மற்றும் ‘சிறகுகள்’ ஆகிய மூன்று புதிய முன்னெடுப்புகளைத் தொடங்கியுள்ளது.
- ‘சிறகுகள்’ திட்டத்தின் கீழ், திருநர் சமூகத்தினைச் சேர்ந்தவர்கள் 5% வட்டி விகிதத்தில் 5,000 முதல் 1 லட்சம் ரூபாய் வரையிலான கடனைப் பெறலாம்.
- சிறு தொழில்கள், சுயதொழில் செய்பவர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் இந்தக் கடன்களைப் பெற இயலும்.
- கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு உயிரிழப்பு, இயலாமை மற்றும் காயம் போன்றவை ஏற்பட்டால் அவர்களுக்கு இந்த 'வேர்கள்' முன்னெடுப்பின் கீழ் நிதி சார் பலன்கள் வழங்கப்படுகிறது.
- உறுப்பினர்கள், விபத்து மூலம் ஏற்படும் மரணத்திற்கு சுமார் 1 லட்சம் ரூபாயும், இயற்கையான மரணத்திற்கு சுமார் 50,000 ரூபாயும், நிரந்தர உடல் குறைபாட்டிற்கு 50,000 ரூபாயும் உதவித் தொகைப் பலன்களைப் பெறலாம்.
- உறுப்பினர்கள் 100 ரூபாய் மாதாந்திரச் சந்தா செலுத்தி இத்திட்டத்தில் சேரலாம்.
- ‘விழுதுகள்’ முன்னெடுப்பு என்பது கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்களுக்கு நிதி உதவி வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஊழியர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு, விபத்து மூலம் ஏற்பட்ட மரணத்திற்கு 5

லட்சம் ரூபாயும், இயற்கையான மரணத்திற்கு சுமார் 1 லட்சம் ரூபாயும், நிரந்தர உடல் குறைபாட்டிற்கு 2.5 லட்சம் ரூபாயும் வழங்கப்படும்.

- பணியாளர்கள் மாதந்தோறும் 300 ரூபாய் செலுத்தி இத்திட்டத்தில் சேர வேண்டும்.

## பெண்ணையாறு நதி பிரச்சினை




- பெண்ணையாறு நதிநீர் பங்கீடு தொடர்பாக தமிழகம் மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களுக்கு இடையேயான பிரச்சனை குறித்து ஒரு பேச்சுவார்த்தை நடத்தியதன் வாயிலாக குழு தயாரித்த ஒரு அறிக்கையை பதிவு செய்யுமாறு மத்திய அரசிற்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- 1956 ஆம் ஆண்டின் மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர்ப் பிரச்சினைகள் என்ற சட்டத்தின் 4வது பிரிவின் கீழ் ஒரு புதியப் பேச்சுவார்த்தைக் குழுவை அமைக்குமாறு நீதிமன்றம் ஆனது 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மத்திய அரசிற்கு உத்தரவு இட்டது.
- இரு மாநிலங்களுக்கிடையில் ஒரு தீர்மானத்தினைக் கொண்டு வருவதற்கான தீவிர முயற்சியை மேற்கொள்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2018 ஆம் ஆண்டில், இந்த ஆற்றில் தடுப்பணைகள் மற்றும் சில நீரோட்ட மாற்றுக் கட்டமைப்புகள் தொடர்பான கர்நாடக அரசின் பணிகளுக்கு எதிராக தமிழ்நாடு அரசு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது.
- இரு மாநிலங்களுக்கு இடையேயான இந்த நதியின் நீர் ஒரு தேசியச் சொத்து என்றும் அதன் மீது எந்த ஒரு மாநிலமும் தனி உரிமை கோர முடியாது என்றும் தமிழ்நாடு வாதிட்டது.
- நதி நீர் தொடர்பான 1892 ஆம் ஆண்டு ஒப்பந்தம் ஆனது, ஒப்பந்ததார மாநிலங்கள் மீது "செல்லுபடியாகும் தன்மை உடையது மற்றும் பிணைப்பு தன்மை கொண்டது" என்றும் தமிழ்நாடு அரசு வாதிட்டது.

# தேசியச் செய்திகள்

## அடல் புத்தாக்கத் திட்டம் 2.0

- நிதி ஆயோக் அமைப்பின் கீழ் இயங்கும் அடல் புத்தாக்கத் திட்டத்தின் (AIM) முதன்மை முன்னெடுப்பினை 2028 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரை தொடர்வதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- AIM 2.0 ஆனது, இந்தியாவின் புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவோர் சூழலை நன்கு மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளதோடு, இது உலக அளவில் போட்டி மற்றும் புத்தாக்கம் சார்ந்த பொருளாதாரமாக மாற வேண்டும் என்ற இந்திய நாட்டின் இலக்கை முன்னெடுத்து செல்கிறது.
- இந்தியாவானது தற்போது உலகளாவியப் புத்தாக்கக் குறியீட்டில் 39வது இடத்தில் உள்ளதோடு, உலகின் மூன்றாவது பெரியப் புத்தொழில் நிறுவன சூழல் அமைப்பைக் கொண்டுள்ளது.




## PAN 2.0





- பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு (CCEA) ஆனது, வருமான வரித் துறையின் PAN 2.0 திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- அரசு நிறுவனங்களின் அனைத்து எண்ணிம அமைப்புகளுக்கும் நிரந்தரக் கணக்கு எண்ணை உருவாக்கி அதனை 'பொது வணிக அடையாளக் குறியீடாக' மாற்றுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது தற்போதைய PAN/TAN 1.0 சூழல் அமைப்பின் மேம்பட்ட வடிவமாக இருக்கும் என்ற

நிலையில் இது ஒரு முக்கிய மற்றும் முக்கியத்துவம் சாராத PAN/TAN செயல்பாடுகள் மற்றும் PAN சரிபார்ப்புச் சேவையை ஒருங்கிணைக்கும்.

- காகிதப் பதிவு சார்ந்த பல நடைமுறைகள் ஆனது எண்ணிம நடைமுறைகள் மூலம் தற்போது நீக்கப் பட்டுள்ளது என்பதனால் இது நிலைத்தன்மையை ஊக்குவிக்கிறது.

### ‘ஒரே நாடு ஒரு சந்தா’ திட்டம்




- ‘ஒரே நாடு ஒரே சந்தா’ (ONOS) என்ற முன்னெடுப்பிற்கு சுமார் 6,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இது இந்தியாவின் உயர்கல்வி நிறுவனங்கள் (HEIs) சிறந்த கல்வி வளங்களை அணுக உதவும்.
- ONOS திட்டத்தின் மூலம், அனைத்து அரசு HEI நிறுவனங்களுக்குமான ஆய்வறிக்கை/ ஆய்வு முடிவு அணுகலுக்கான தனித்தனியான அணுகுமுறையை ஒருங்கிணைப்பதை மத்திய அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ONOS ஆனது, மாநில மற்றும் மத்திய அரசு HEIகளை, ஒரே தளத்தில் ஆயிரக்கணக்கான ஆய்வறிக்கைகளை அணுக உதவும் என்பதோடு இது 2025 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல் செயல்பாட்டிற்கு வரும்.
- அனைத்து மத்திய மற்றும் மாநில அரசு உயர் அதிகாரிகளுக்குமான ஒரே சந்தா முறையானது, இந்த ஆய்வறிக்கை வெளியீட்டாளர்களுடனான பேச்சுவார்த்தையின் போதான கட்டண வாதிடுதலுக்கான ஆற்றலை வழங்கும்.

## சர்வதேசச் செய்திகள்

### ரியாத் வடிவமைப்பு சட்ட ஒப்பந்தம்

- சுமார் இருபது ஆண்டு கால பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு, இந்தியா உள்ளிட்ட உலக அறிவுசார் சொத்து அமைப்பின் (WIPO) உறுப்பினர் நாடுகள் ஆனது வடிவமைப்பு சட்ட ஒப்பந்தத்தை (DLT) ஏற்றுக்கொண்டுள்ளன.

- அவை ரியாத் வடிவமைப்பு சட்ட ஒப்பந்தத்தின் இறுதிச் சட்டத்தில் கையெழுத்திட்டன.
- இது பல்வேறு நாடுகளில் உள்ள தொழில்துறை வடிவமைப்புகளின் நடைமுறைகளை ஒருங்கிணைக்கவும், பதிவுச் செயல்முறைகளை எளிதாக்கவும் முயல்கிறது.
- கடந்த இரண்டு ஆண்டுகளில் உள்நாட்டுத் தாக்கல் 120 சதவீதம் அதிகரித்துள்ளதுடன், கடந்த பத்தாண்டுகளில், இந்தியாவில் வடிவமைப்பு பதிவுகள் சுமார் மூன்று மடங்காக அதிகரித்துள்ளன.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### ஓபியோபேகஸ் காளிங்கா




- மேற்குத் தொடர்ச்சி மலையில் காணப்படும் இராஜ நாகப் பாம்பிற்கு ஓபியோபகஸ் காளிங்கா என கர்நாடகா மாநிலம் அதிகாரப் பூர்வமாகப் பெயரிட்டுள்ளது.
- இது முதன்முதலில் 1836 ஆம் ஆண்டில் டென்மார்க் நாட்டின் ஒரு இயற்கையியலாளர் தியோடர் எட்வர்ட் கேண்டர் என்பவரால் ஓபியோபகஸ் ஹன்னா என வகைப்படுத்தப் பட்டது.
- பகலில் நடமாடும் இந்தப் பாம்புகள் ஆனது, பெரும்பாலும் சாரைப் பாம்புகள், தமன் பாம்புகள் மற்றும் பிற நாகப் பாம்புகள் போன்ற பாம்புகளை உண்கின்றன.
- இராஜ நாகப் பாம்பு ஆனது, புவியியல் வம்சாவளியின் அடிப்படையில் நான்கு வெவ்வேறு இனங்களாக மறுவகைப் படுத்தப்பட்டுள்ளது.

- வடக்கு இராஜ நாகம் (ஓபியோபகஸ் ஹன்னா): பாகிஸ்தான் முதல் கிழக்கு சீனா மற்றும் தென்கிழக்கு ஆசியா வரை காணப்படுகிறது.
- சுண்டா இராஜ நாகம் (ஓபியோபகஸ் பங்காரஸ்): தாய்லாந்து, மலேசியா மற்றும் பிலிப்பைன்ஸின் சில பகுதிகள் உட்பட தென்கிழக்கு ஆசியாவில் வாழ்கிறது.
- மேற்குத் தொடர்ச்சி மலைகளின் இராஜ நாகப்பாம்பு (ஓபியோபேகஸ் காளிங்கா): இந்தியாவின் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் காணப்படுகிறது.
- லூசோன் இராஜ நாகம் (ஓபியோபகஸ் சல்வடனா): பிலிப்பைன்ஸின் லூசன் தீவில் மட்டுமே காணப்படுகிறது.

# முக்கிய தினங்கள்

## உலக நிலையானப் போக்குவரத்து தினம் - நவம்பர் 26





- நிலையான பொருளாதார வளர்ச்சியை ஆதரிப்பதில் அனைவருக்கும் பாதுகாப்பான, மலிவு விலையிலான, எளிதில் அணுகக் கூடிய மற்றும் நிலையானப் போக்குவரத்து அமைப்புகளின் முக்கியப் பங்கை இது அங்கீகரிக்கிறது.
- ஒவ்வோர் ஆண்டும் சுமார் 1.19 மில்லியன் மக்கள் சாலைப் போக்குவரத்து சார்ந்த பல விபத்துகளால் உயிரிழக்கின்றனர்.
- இது உலக நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 3% அளவு இழப்பினை ஏற்படுத்துகிறது.
- வளர்ந்து வரும் நாடுகளில், 1 பில்லியன் மக்கள் இன்னும் அனைத்து வானிலையிலும் இயங்கும் சாலைகளுக்கான அணுகலைப் பெற்றிருக்கவில்லை.

## செந்நிறக் கோள் தினம் - நவம்பர் 28

- செவ்வாய்க் கிரகத்தின் மேற்பரப்பில் இரும்பு ஆக்சைடு இருப்பதன் காரணமாக செந் நிறத்தில் தோன்றுவதால், "செந்நிறக் கிரகம்" என்று அழைக்கப்படும் இக்கோளைப் பற்றிய ஆய்வு மற்றும் மதிப்பாய்வுகளைக் கொண்டாடுவதை இது ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நாள் விண்வெளி ஆய்வு வரலாற்றில் 1964 ஆம் ஆண்டு நவம்பர் 28 ஆம் தேதி

அன்று நாசாவின் மரைனர் 4 விண்கலம் விண்ணில் ஏவப்பட்ட ஒரு மைல்கல் நிகழ்வை நினைவுகூறுகிறது.

- செவ்வாய்க் கிரகத்தில் பறந்து, அந்தக் கிரகத்தின் அருகாமைப் படங்களை அனுப்பிய முதல் வெற்றிகரமான கலம் இதுவாகும்.




## சர்வதேச ஜாகுவார் தினம் - நவம்பர் 29




- இந்தத் தினம் ஆனது அரசாங்கங்கள், அமைப்புகள் மற்றும் பல்வேறு தனிநபர்கள் தலைமையிலான எண்ணற்ற வளங்காப்பு முன்னெடுப்புகளுக்கான ஒரு கவனத்தை ஈர்க்கிறது.
- 1973 ஆம் ஆண்டில், அருகி வரும் காட்டு விலங்குகள் மற்றும் தாவரங்களின் (CITES) சர்வதேச வர்த்தகம் தொடர்பான உடன்படிக்கை ஆனது, ஜாகுவார்களை அருகி வரும் இனமாக வகைப்படுத்தியது.
- மத்திய அமெரிக்காவில் உள்ள பெலிஸ் மிருகக்காட்சிசாலையால் புனர்வாழ்வளிக்கப் பட்ட லிசோ என்ற ஒரு ஜாகுவாரின் பிறந்த நாளை ஒட்டி இந்தத் தேதி தேர்ந்தெடுக்கப் பட்டது.
- இது மெக்ஸிகோ முதல் அர்ஜென்டினா வரை சுமார் 18 நாடுகளில் காணப்படுவதோடு ஜாகுவார்கள் பெரும்பாலும் அதிக எண்ணிக்கையிலான காட்டு ஜாகுவார்கள் காணப்

படுகின்ற பிரேசிலில் அதிகம் காணப்படுகின்றன.

- 2020 ஆம் ஆண்டில், உலக வனவிலங்கு கூட்டமைப்பு (WWF) ஜாகுவார் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும், 2030 ஆம் ஆண்டில் அவற்றின் வாழ்விடங்களைப் பாதுகாப்பதற்கும் ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

## இரசாயனப் போரில் பாதிக்கப்பட்ட அனைவருக்குமான நினைவு நாள் - நவம்பர் 30

- இரசாயனப் போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதுடன், இரசாயன ஆயுதங்களின் அச்சுறுத்தலை அகற்றுவதற்கான ஒரு இரசாயன ஆயுதத் தடைக்கான அமைப்பின் (OPCW) உறுதிப்பாட்டை இத்தினம் உறுதிப்படுத்துகிறது.
- இது மேலும் அமைதி, பாதுகாப்பு மற்றும் பன்முகச் சார்பியம் போன்ற இலக்குகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஐக்கிய நாடுகள் சபை (UN) ஆனது இந்த நாளை அதிகாரப் பூர்வமாக அங்கீகரித்ததை அடுத்து, 2005 ஆம் ஆண்டு முதல் இத்தினம் கொண்டாடப்படுகிறது.
- 1993 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப் பட்ட இரசாயன ஆயுதங்கள் ஒப்பந்தம் ஆனது 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் 29 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்தது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★